12.02.2020

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.02/2013**

**வா.சா.1 ராஜு, த/பெ. மாணிக்கம்**

**வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு தாக்கல் செய்து 6, 7 வருடங்கள் இருக்கும். எனது சொத்தை மற்றவர்கள் ஆக்கிரமிப்பு செய்ததால் வழக்கு தாக்கல் செய்தேன். என்ன பரிகாரம் கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சொந்தமான இடத்தை மற்றவர்கள் ஆக்கிரமிக்க முயலுவதால் சொத்து எனக்கு பாத்தியப்பட்டதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்குடன் தற்காலிக உறுத்துக்கட்டளை கோரி இடைக்கால மனுவை தாக்கல் செய்துள்ளேன். அந்த மனுவில் என் சார்பாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்படவில்லை. இடைக்கால மனுவில் ஏற்பட்ட உத்தரவின் பேரில் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேன். அந்த மேல்முறையீடும் தள்ளுபடி ஆகிவிட்டது. தாவா சொத்தானது சந்து பாதை என நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனை ஆகும். வழக்குச் சொத்திற்கு என் பெயரில் பட்டா வழங்க கோரி மாவட்ட ஆட்சியரிடமும் வட்டாட்சியரிடமும் புகார் கொடுத்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் அவரது சொத்திற்கும் எனது தாயாரின் சொத்திற்கும் இடையே உள்ள சந்து பாதைதான் வழக்கிடை சொத்து என கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அது மனை ஆகும். எனது தாயார் பெயரில் 24.08.1966ல் ஏற்பட்ட கிரையப்பத்திரப்படியான சொத்தானது வழக்குரையுடன் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 வரைபடத்தில் கண்டுள்ள பச்சை வண்ணமிட்ட பகுதி என்றால் சரிதான். என் தயார் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தில் கிரையம் பெற்ற வா.சா.ஆ.1ன் படியான பச்சை வண்ணமிட்ட பகுதிக்கு செல்வதற்கு மஞ்சள் வண்ணமிட்ட கிழமேல் பாதை வழியாகத் தான் பாதை பாத்தியம்

12.02.2020



உள்ளதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ன் படியான மஞ்சள் வண்ணமிட்ட பகுதி தான் எனக்கும் பிரதிவாதிக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட பாதை என்றால் சரியல்ல. மஞ்சள் வண்ணமிட்ட பகுதி உண்மையிலேயே எனக்கும் மட்டும் சொந்தமானதாக இருந்திருந்தால் அதை பொறுத்து வட்டாட்சியரிடம் மனு செய்து பட்டா பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3ன்படி எனது தாயார் பெயரில் திருமலையம்மாள் பெயரில் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தின் சொத்து விவரத்தில் கிரையம் செய்து கொடுக்கும் மனைக்கு வடக்கு இதற்கு உட்பட்ட கிழமேல் ஜாதியடி 29 தென்வடல் ஜாதியடி 5 உள்ள மனையில் நடந்து கொள்ளும் பாத்தியம் என குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ1ன் படியான வரைபடத்தில் கண்ட மஞ்சள் வண்ணமிட்ட பகுதியானது வருவாய் துறையினரால் சந்து பாதை என வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்டதான கூறும் வழக்கிடை சொத்தின் சர்வே எண்.359 ஆகும். மேற்படி வழக்கிடை சொத்திற்கு வடபுறத்தில் உள்ள நிலத்தின் சர்வே எண். என்னவென்றால் அந்த சொத்திற்கும் அதே சர்வே நெம்பர் தான். சர்வே எண். 359ல் கண்டுள்ள வழக்கிடை சொத்து புறம்போக்கு என்றால் சரிதான். அதற்கு நான் இன்னும் பட்டா பெறவில்லை. தாவா சொத்து புறம்போக்கு என்பதால் தான் மாவட்ட ஆட்சியரிடம் பட்டா வேண்டி மனு கொடுத்தும் எனக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கும் பிரதிவாதிக்கும் மட்டும் பாத்தியப்பட்டது என்றாலும் அந்த சொத்தில் பிரதிவாதி அரளைமண் கொட்டி பாத்ரூம் கட்டி உள்ளார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதியால் அரளைமண் கொட்டியோ பாத்ரூம் கட்டிமோ அமைக்கப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் பிரதிவாதி தாவா சொத்தில் பைப்லைன் அமைக்க முயற்சி செய்கிறார் என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. பாத்ரூம் கட்டுவதற்கு தான் முயற்சி

செய்தார். அதை நான் தடுத்து நிறுத்தி போலீஸில் புகார் கொடுத்தேன். எனது தாயார் கிரையம் பெற்ற சொத்தின் கிழமேல் அடிஅளவு 27 ஜாதியடி என்றால் சரிதான். (சாட்சி திரும்பவும் மாற்றி சரியாக அடிஅளவு தெரியவில்லை என்று கூறுகிறார்.). கடந்த 07.03.1988ம் தேதியன்று பழனிச்சாமி செட்டி என்பவர் மாணிக்கம், வீரன் ஆகியோருக்கு கொடுத்த கிரையப்பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.6 ஆகும். என் பெயருக்கு மாணிக்கம், வீரன் ஆகியோரால் எழுதிக் கொடுக்கப்பட்ட கிரையப்பத்திரம் வா.சா.ஆ.7 ஆகும். மேற்படி மாணிக்கம், வீரன் ஆகியயோருக்கு பழனிச்சாமி செட்டியாரால் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரையப்பத்திரத்தில் கிழமேல் ஜாதியடி 31 தென்வடல் ஜாதியடி 24 கூடுதல் 744 சதுரடி மனை பூராவும் என குறிப்பிடப்பட்டுள்ளது. என் பெயருக்கு மாணிக்கம், வீரனால் எழுதிக்கொடுக்கப்பட்ட கிரையச்சொத்தின் விஸ்தீரணம் ஆனது கிழமேல் ஜாதியடி தென்புறம் 38 வடபுறம் 37 தென்வடல் ஜாதியடி இருபுறமும் 24 இந்த அடி உள்ள 900 சதுரடி மனை பூராவும் கிரையம் ஏற்பட்டதாக கண்டு எழுதப்பட்டுள்ளது. மாணிக்கம், வீரன் பேரில் ஏற்பட்ட கிரையப்பத்திரத்தில் 744 சதுரடி மட்டுமே உள்ள நிலையில் அவருக்கு உரிமை ஏற்படாத அதிகப்படியான அளவுகளை கொண்டு 900 சதுரடி ஆக எனக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்கள் என் வசம் உள்ளது. 744 அடி விட கூடுதலாக 900 சதுரடி என குறிப்பிட்டு நான் கிரையம் பெற்றுள்ள பத்திரத்தில் கண்டுள்ள கூடுதல் அடிஅளவு உள்ள நிலமானது புறம்போக்கு நிலம் என்றால் சரியல்ல. எனது தாயார் திருமலையம்மாளிடமிருந்து மூக்கன் என்பவர் கிரையம் பெற்றார். மேற்படி மூக்கன் என்பவரிடமிருந்து வைரன் என்பவர் அந்த சொத்தை கிரையம் பெற்றார். மேற்படி வைரன் என்பவரிடமிருந்து கிரையம் சொத்தை பிரதிவாதி கோவிந்தன் கிரையம் பெற்றுள்ளார். பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள கிரையப்பத்திரத்தில் தாவா சொத்து வழியாகத்தான் பாதை பாத்தியம் உள்ளதாக கண்டு

12.02.2020



எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து உண்மையிலேயே எனக்கு பாத்தியப்பட்டதா இருந்திருந்தால்அந்த சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியிருப்பேன் என்றாலும் தாவா சொத்தை பொறுத்து இயற்கை அமைவிடம் காட்டுவதற்கு நீதிமன்ற ஆணையர் மூலம் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலேயே தாவா சொத்து சந்து பாதை என வகைபாடு செய்யப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை சுற்றிலும் எங்களது உறவினர்கள் தான் உள்ளார்கள் என்றால் சரியல்ல. எங்கள் சமூகத்தை சேர்ந்தவர் வசித்து கொண்டு வருகிறார்கள். பிரதிவாதி வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள். பிரதிவாதியிடம் பிரச்சினை செய்தால் அவர் வழக்கு சொத்தைவிட்டு சென்று விடுவார் என்ற நோக்கத்துடன் பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் என்னுடைய வழக்குக்குரிய வழக்குமூலம் ஏதும் இல்லாததால் தள்ளுபடி செய்ய வேண்டியது என்றாலும் சரியல்ல.